# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 215/2024

Deposition of Witness Pw7 Examined as Lw7 Dt. 30.06.2026

| | |
|---|---|
| Name | தமிழ்குமரன் |
| Husband Name | பழனிசாமி |
| Calling Name | உதவி மருத்துவர் மயிலாடுதுறை |
| Age | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day30.06.26.

**A1 to A4 Accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.01.2024 ஆம் தேதி இரவு 11.25 மணியளவில் நான் பணியில் இருந்த போது தியாகராஜன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக வந்தவரை நான் பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவில் இருந்தார். மேலும் அவரை அடையாளம் தெரிந்த 3 நபர்களும் அடையாளம் தெரியா 17 நபர்களும் அசிக்காடு என்ற இடத்தில் கத்தியாலும் கட்டையாலும் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது கீழ்க்கண்ட காயங்கள்.

1. சிதைந்த காயம் இடது புற முன் தலையில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது,
2. சிதைந்த காயம் இடது புற தலையின் பக்கவாட்டில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது.
3. இடது கண் வீங்கிய நிலையில் காணப்பட்டது.
4. வலது தோள்பட்டை வீங்கிய நிலையில் காணப்பட்டது.

அவருக்கு நுண்கதிர் படம் மற்றும் தலைக்கு C T Scan எடுக்க பரிந்துரை செய்யப்பட்டது. நுண்கதிர் படத்தில் வலது தோள்பட்டை எழும்பு விலகி காணப்பட்டது. தோள் பட்டை எழும்பில் முறிவு இருந்தது. தலைக்கு எடுக்கப்பட்ட C T Scan Normal என முடிவு வந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய சான்று ஆவணம் **அ.த.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 4 எதிரிகள் தர்ப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரணை செய்த போது என்னிடம் ஆயுதங்களை காண்பித்து விசாரித்தார்களா என்றால் சரிதான். 1 கத்தி மற்றும் 2 கட்டைகளை காண்பித்தார்கள். தலையில் ஏற்ப்பட்ட காயத்திற்கு இரத்த கசிவு இருந்ததாக விபத்துப் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்திற்கு கட்டை மற்றும் கத்தியால் தாக்கியதற்கான அடையாளம் ஏதேனும் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தோள்பட்டையில் உள்ள எழும்பு விலகுவது சாதாரணமாக கீழே விழும் பொழுது கையை ஊன்றினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. C T Scan மற்றும் X ray விசாரணை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். கண் வீக்கத்திற்கு அவரை கண்மருத்துவரிடம் அனுப்பினேன் என்றால் அனுப்பினேன். அது குறித்து கண் மருத்துவரிடம் கருத்துரை வாங்கியுள்ளேனா என்றால் கண்ணின் வெளியுரையில் இரத்த கட்டு இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். அந்த காயங்களுக்கு தனியாக கருத்துரை ஏதும் வழங்கவில்லை. 108 ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து வந்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் மருத்துவமயையில் உள்ள

உள்நோயாளிகள் ஆவணத்தில் உள்ளது. என்னிடம் உள்ள ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டிலும் அழைத்து வந்தது 108 ஆம்புலன்ஸ் என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள 1 முதல் 3 காயங்கள் குறித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிடபடவில்லை என்றாலும் நான் கொண்டுவந்துள்ள case sheet ல் இல்லை என்றால் சரிதான். தலையில் ஏற்பட்ட காயங்கள் கடினமான பகுதியில் தலை மோதிக்கொள்ளும் பொழுது ஏற்பட வாய்புள்ளதா என்றால் உள்ளது. தியாகராஜன் ஆய்வறிக்கையை சரிவர பரிசோதனை செய்யாமல் விபத்து பதிவேட்டில் காயங்கள் தன்மையைக் குறித்து சரிவர குறிப்பிடாமலும் விபத்து பதிவேடு வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, தனது
யின் முன்னிலையில் சாட்சிக்கு
காட்டப்பட்டு அவரால் சரியானதென
ஏற்கப்பட்டது

நீதித்துறை நடுவர்